மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும் 4000 ரூபாய் வீதம் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு இன்சூரன்ஸ் போன்ற தொகையைச் சேர்த்து வைக்கிறார்கள். விபத்துக்குள்ளாகக் கூடியவர்களுக்கு நீதி மன்றத்தின் மூலமாகவோ அல்லது நேரடி பேச்சுவார்த்தையின் மூலமாகவோ எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்படுகிறதோ அது அந்தத் தொகையிலே இருந்து கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை அந்தத் தொகை போதவில்லை என்று கருதினால் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அதற்காக மேலும் தேவையான பணத்தை, தேவையான அளவுக்கு ஒதுக்குகின்றன.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து ஏற்படுகிறபோது அந்த இழப்புகளுக்காகத் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது தொகை வசூலிக்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி ஏதாவது வசூலிக்கப்படுமானால் அது கைவிடப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் ஏற்படுகிறபோது தொழிலாளர்களிடமிருந்து அதற்கான நஷ்ட ஈட்டை முழுமையாக வசூலித்துவிட முடியாது. ஆனால் விபத்துக்களைத் தடுக்கவேண்டுமென்ற உணர்வோடுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விபத்துக்குக் காரணமாக இருந்துவிட்டால் அந்தத் தொழிலாளருக்கு என்ன வகையில் உரிய தண்டனை கொடுக்க வேண்டுமோ, அந்தத் தண்டனை கொடுக்கிற வகையில் தொகை வசூலிக்கப்படுகிறதே தவிர பேருந்து அடிபட்டுவிட்டது, அதற்குக் காம்பென்சேஷன் என்பதைப்போல வசூலிக்கப்படுவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு

129—(*வினா எண். 12328) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு போடும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று அடுத்து வரும் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளில் இது சேர்க்கப்பட்டுள்ளது.

1987 நவம்பர் 16]

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எடுத்து பல ஆண்டுகள் ஆகியும், அதற்கு நில ஆர்ஜிதம் செய்தும், ஆர்ஜிதம் செய்த நிலம் முழுவதையும் விவசாயிகள் எடுத்து விவசாயப் பயிர் செய்து விட்டார்கள். மேலும் மதுரையிலே இருந்து திருச்செந்தூர், தூத்துக்குடி செல்ல வேண்டுமானால், அருப்புக் கோட்டையைத் தாண்டிதான் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செல்கிற நேரத்தில் அருப்புக்கோட்டைக்கும் காரியாபட்டிக்கும் மத்தியிலே பாளையம்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பாளையம்பட்டி என்ற ஊர் வழியாகச் செல்கிற நேரத்தில் தெப்பக்குளமும் கோயிலும் இருக்கின்றன. அந்த இடத்திலே அடிக்கடி உயிர் இழப்பும், விபத்துக்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே பாளையம்பட்டி ஊருக்குள்ளேயும், அருப்புக்கோட்டை நகரத்திற்குள்ளேயும்தான் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ½ மணி நேரத்திற்கு ஒரு பஸ் போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப்போகிற நேரத்தில் ஜன நெருக்கடியான பகுதியாக இருக்கிறபடியால் இந்த பை-பாஸ் போடும் திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல 5 1/4 லட்சம் ரூபாய் செலவழித்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாற்றுப் பாதையை அமைப்பதற்கு ஏறத்தாழ 60 லட்சம் ரூபாய் ஆகும் என்று திட்டம் தீட்டி இப்போது கைவசம் உள்ளது. ஆனால் நிதி பற்றாக் குறையின் காரணமாகத்தான் தள்ளிப்போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எதிர் காலத்தில் நிதி நிலையை அனுசரித்து வேகமாக எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாகை துறைமுகம்.

130—(*வினா எண். 14033) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.